not proper understanding the expansion could not be gone through and new building had not been acquired. Will the Hon. Minister tell us what steps he has taken to see that the Government is able to cope up with increasing number of patients that are coming to Madurai Erskine hospital?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** வருகின்ற பொது மக்கள் தங்குவதற்குக் கூடம் கட்டுவது பற்றிய விவரம் மட்டுந் தான் இருக்கிறது. விரிவுபடுத்தும் முயற்சிகள் பற்றிய விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

### செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகள்

*37 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது 1969 அக்டோபரில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** வீடு இழந்தோருக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 2,990-ம் வெள்ளத்தால் சேத மடைந்த சாலைகள், குளங்கள் செப்பனிட வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 1,50,000-ம் செலவழிக்கப்பட்டது.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** எந்தெந்த இடங்களில் எவ்வளவு செலவழிக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதைப் பற்றிய விவரங்கள் இல்லை.

### நீலகிரி மாவட்டம் பண்ணை நிலங்கள் பேரில் அடிப்படைத் தீர்வை

*38 வினா—**திரு. கே. போஜன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காப்பி முதலியன சாகுபடி செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு அடிப்படை நிலவரி வசூலித்து வருவது உண்மையா?

(இ) ஆம் எனில், நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் நிலவரி வசூலிப்பதின் காரணம் என்ன?

(உ) இந்த அடிப்படை நிலவரியை ரத்து செய்ய, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ஆம்.

(இ) மலைப் பகுதிகளிலுள்ள பண்ணை நிலங்கள் புன்செய் நிலங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவை சம வெளிகளிலுள்ள புன்செய் நிலங்களுக்கு இணையாகக் கருதப்படக் கூடாது என்று அரசு கருதுகிறது. எனவே, வருவாய்த்துறையின் 22-6-67ஆம் நாளிட்ட 1122ஆம் எண் அரசு ஆணையில் ஆணையிடப்